ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 2-5-2013 (வியாழக்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

172. மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

173. மானியக் கோரிக்கை எண் 24-சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

174. மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

175. மானியக் கோரிக்கை எண் 35-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)

176. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 - இலக்கை நோக்கி...' என்கிற நூல். (தமிழ்)

[2013 ஏப்ரல் 30

177. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013-2014. (தமிழ்)

\- - - - -